


# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

குரல்: 4 இசை: 10

விலை 25 காசு

## படிக்கின்றோம்; பேசுகின்றோம்; செய்கின்றோமா?

'ஒன்றே குலம்'—என
உரக்கப் படிக்கின்றோம்!
மன்றினில் மேடையில்
வான்பட முழக்குவோம்!
என்றைக் காகிலும்
எவ்விடத் தாகிலும்
நின்(று) அதன் பொருளை
நினைத்திருப் போமா?
படிப்ப தெதற்குத் தம்பி?—கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

'ஒருவனே இறைவன்'—என்
றுரைப்பது நாம்தாம்!
உருவமோ, பெயரோ
ஒருகோடி இருக்கும்!
தெருவெலாம் கோயில்கள்;
திருவிழா, பலவகை!
ஒருநொடி யாகிலும்
உணர்ந்திருப் போமா?
படிப்ப தெதற்குத் தம்பி?—கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

'யாவரும் ஒருநிறை'—
இனிக்க உரைக்கிறோம்!
'ஏவலன் செல்வன்'—என்
றிருப்பதை மறைக்கிறோம்!
கூவி, இரந்து,
குலைபவர் உழைப்போர்;
மூவேளை உண்டு
மூடர் கொழுப்பதா?
படிப்ப தெதற்குத் தம்பி?—கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

'எல்லாரும் இந்நாட்டு
மன்னர்'—என்கிறோம்.
பொல்லாப் பிழையுரை!
பொன்போன்ற மண்ணுரை!
கல்லாரும் கயவரும்
கள்ளரும் மன்னரா?
கல்வியும் ஒழுங்கும்,
கயமையும்—ஒன்றா?
படிப்ப தெதற்குத் தம்பி—கடைப்
பிடிப்ப தற்கா? பீற்றுவ தற்கா?

# பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

பிள்ளை பிறந்தது; பிறக்கும் போதே
கொள்ளை அழகதன் கூடப் பிறந்ததே!
உறுப்புகள் யாவும் அதனுடன் பிறந்தன.
கறுப்பு நிறமும் கூடவே பிறந்தது.
மற்றவர் பெற்ற மருத்துவ மனையில்தான்
பெற்றெடுத் தாள், அதைப் பெற்ற பொற்றொடி!

"பிறந்தது ஆணா பெண்ணா?"—என்றனர்;
அரும்பெரும் மகிழ்வோடு "ஆணே" என்றாள்.

"அச்செலாம் உன்போல்" என்றனர்; அதன்பின்
உச்சி குளிர்ந்தாள்; உவகை வழிந்தது.

"பிறந்த குழந்தையின் பிறப்பென்ன?"—என்றனர்;
"பிறந்தது மாந்தப் பிறப்பே"—என்றாள்.

"குழந்தையின் குலத்தைக் கேட்டோம்...!"—என்றனர்.
"பழந்தமிழ்க் குலம்"—எனப் பாவை மொழிந்தாள்.
"அப்படி என்றால், அதுவென்ன சாதி!"—
இப்படிக் கேட்கவே எழுந்தாள் நங்கை!

"கண்ணொடு பிறந்தது; காதொடு பிறந்ததே;
உண்ணும் வாயொடும் உடலொடும் பிறந்ததே!
நலத்தொடு பிறந்தது; நானறிய எந்தக்
குலத்தொடும் பிறக்கிலை; குணத்தொடும் பிறக்கிலை;
தூய்மை உடலொடும் தூய்மை அறிவொடும்
தூய்மை உளத்தொடும் தோன்றிய குழந்தைக்கு

ஏது "சாதி"? இழிவுயர் வெல்லாம்?
தீதிலாப் பிறப்பைத் தீப்பிறப் பாக்குறீர்!"—
என்று மொழிந்தாள் ஏந்திழை;
நின்று கேட்டவர் நகர்ந்தனர் விரைந்தே!

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-4. | தி.பி.-௨௦௦௧-விடை-மே,சூன்-70 | இசை-10


## மாந்த உருவமே!

தெருத்தெரு வாக, வீடுவீ டாக,
ஒருவேளைச் சோற்றுக்கு இரந்து திரிகின்ற
உருவமும் மாந்த உருவமே!—அந்த
உருவமும் மாந்த உருவமே!

மெய்யும் நம்போல்; மேனியும் நம்போல்;
கைகால் உண்டு; கண்கா துண்டு;
அழுக்கிருந் தாலும் அழகும் இருக்கும்;
ஒழுக்கமும் இருக்கும்; உயர்வும் இருக்கும்;
இருப்பினும் நம்போல் வாழ்க்கை இல்லையே!
உருவமும் மாந்த உருவமே!—அந்த
உருவமும் மாந்த உருவமே!


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

உருக்குலைந் திட்ட உருவம்! ஒளியிலாது
ஒட்டி உலர்ந்த கன்னம்! திரிபோல்
கட்டித் திரண்டு காய்ந்த தலைமயிர்!
குழிந்த கண்கள்! கரும்பினில் சாறு
பிழிந்த சக்கையே கைகளும் கால்களும்!
வாடிய மாம்பழத் தோலின் மீதில்
ஓடிய சுருக்கம் உடம்பெலாந் தோய்ந்த
உருவமும் மாந்த உருவமே!—அந்த
உருவமும் மாந்த உருவமே!

மொச்சை நாற்றம் வீசிடும் அழுக்குடை!
கொச்சைப் பேச்சு! கூனிய முதுகு!
தளர்ந்த தோள்கள்! தள்ளாடும் மென்னடை!
கிளர்ந்த தீப்பசி; கெஞ்சிய வாழ்க்கை!
பெருமையே இல்லாச் சருகுகள்!—ஆயினும்
உருவமும் மாந்த உருவமே!—அந்த
உருவமும் மாந்த உருவமே!

வெட்ட வெளியிலோ, வீதி விளிம்பிலோ
கொட்டும் மழையிலோ, கொளுத்தும் வெயிலிலோ,
சாய்க்கடை யோடு சாய்க்கடை யாக—
நாய்க ளோடு நாய்க ளாக—
கொட்டிய இலைகளைக் குடைந்த வாறாய்
வாய்க்கும் வயிற்றுக்கும் போராடிச் சாகும்
உருவமும் மாந்த உருவமே!—அந்த
உருவமும் மாந்த உருவமே!

வானை அளாவக் கட்டிய வளமனை!
நீணிலம் அளக்கும் நெடிய ஊர்திகள்!
நிலவுக்குத் தாவும் அளவுக்கு அறிவியல்;
நாகரிக வாழ்க்கை; ஆரவா ரங்கள்!
விழாக்கள்; விருந்துகள்; உழாத விளைவுகள்!
செல்வக் கொழிப்பு! ஆயினும் ஒருபுறம்
இல்லாமை என்னும் இழிந்த பாழ்நிலை!
அந்த நிலையினில் அமிழ்ந்து சாகும்
உருவமும் மாந்த உருவமே!—அந்த
உருவமும் மாந்த உருவமே!

*புழுப்பிறப் பல்லர்; புழுவினும் தாழ்ந்த*
*இழுக்குடை வாழ்வில் இன்னுஞ் சாவதா?*
*விலங்குகள் அல்லர்; விலங்கினும் தாழ்ந்த*
*நலமிலா வாழ்வில் நலிவுற் றிறப்பதா?*
*நாய்போல் இருப்பின் நாய்களும் உதவும்;*
*பன்றிபோல் இருப்பின் பன்றியும் உதவும்;*
*நன்றி யுணர்விலா நம்மவர் நடுவில்*
*குன்றி ஒடுங்கிக் குலைந்து சாகின்ற*
*உருவமும் மாந்த உருவமே!—அந்த*
*உருவமும் மாந்த உருவமே!*

# ஒரு மடல்


சீர்மை மிகு 'தமிழ்ச்சிட்டு' ஆசிரியர் அவர்களுக்கு எங்கள் வணக்கங்கள்.

தங்களது 'தமிழ்ச்சிட்டை'த் திங்கள் தோறும் படித்து, அறிவு பெற்று இன்புறும் பல்லாயிரக்கணக்கான மாணவ மணிகளுள் நாங்களும் ஒரு பகுதியினர்.

தங்களது 'தமிழ்ச்சிட்டு' எங்களது பள்ளியிலும், இல்லங்களிலும் உள்ள அனைவரது உள்ளங்களிலும் அறிவொளி பரப்பித் திகழ்கிறது. தேனினும் இனிய செந்தமிழின் சுவையினை நாங்கள் சுவைத்து இன்புறச்செய்யும் தங்கள் தமிழ்ச்சிட்டுக்கு எங்கள் வாழ்த்துகள். திங்கள்தோறும் 'சிட்டு' வரும் நாளை நாங்கள் ஆவலுடன் எதிர் பார்த்து நிற்கிறோம். 'சிட்டு' வரும் நாட்கள் தாழ்த்தமானால், எங்கள் உள்ளங்கள் துயருறுகின்றன.

இளம்பருவத்தில் பதியும் எண்ணங்கள் இறவாநிலை பெற்றவை. 'சிட்டு' மூலம் நாங்கள் பெறும் அறிவும் இறவாப் புகழ்ப்பெற்றதே. இத்தகைய சிறப்பான பணி ஆற்றும் தமிழ்ச்சிட்டின் புகழும், பணியும் பாரெங்கும் பரவி, இனிய நறுமணம் கமழ இறைவன் அருள் செய்வானாக. வாழ்க தமிழ்ச்சிட்டு! வளர்க உங்கள் அறிவூட்டும்பணி!

இன்னனம்,
பள்ளி மாணவ மாணவிகள்,
ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி, தேவம்பாளையம்.
பழங்கரை [அஞ்]
அவிநாசிவட்டம், கோவை மாவட்டம்.




பெட்டைக் கழுதை
பெறற்கரிய பிள்ளையையும்
நெட்டை நெடுங்கொம்பு
நீள்காலை மாட்டினையும்
ஒக்கப் பிரிந்தபின்னே
உள்ளம் வருந்தியதாய்,
மிக்க அழுதபடி
மேனி தளர்வுற்றுத்
தள்ளாடித் தள்ளாடித்
தன்னந் தனியாக,

முள்ளாடும் வன்கிளையும்
மொய்த்த புதர்வகையும்,
உள்ளும் புறமுமாய்
ஓடுங் கொடிவகையும்,
விள்ளார்ந்தே ஓங்கிநிற்கும்
வேங்கை குறுக்கத்தி,
புன்னை, செருந்தி, பலா,
புன்கமொடு பாதிரியும்,
கொன்றையோ டாலமரம்,
கோங்கு, விளா, மகிழம்,
பாக்கு, புளி, வேம்பு,
பாலையொடு முள்முருங்கை,
தேக்கு, இலுப்பை, எட்டி,
தேமா, கடம்பு, நொச்சி,

சந்தனமோ டாத்திமரம்,
சண்பகமும், பேரீந்தும்,
முந்திரியும், நல்லிலந்தும்,
மூங்கிலொடு, தீயிலவம்,
நெல்லி, மருதமரம்,
நேர்வாகை, வன்னிமரம்,
வில்வமொடு, பிண்டி, களா,
விண்தடவும் நாவல்—எனும்

காட்டு மரவகையும்
கன்னாபின் னாவென்று,
நீட்டுங் கிளைகளொடு
நெட்டையுமாய், குட்டையுமாய்,
ஒன்றோடு மற்றொன்(று)
உரசி உறவாடிப்
பின்னிப் பிணைந்து
பெருங்காற்றும் சூரியனும்
உள்ளே வராதபடி,
ஓங்கி அடர்ந்திருந்து,
பள்ளமுமாய் மேடுமாய்
பாதை தெரியாமல்,
நீளக் கிடக்கும்
நெடுங்காட்டி னுட்புகுந்து,
மாள நடக்கும்
வகைபோல் நடந்ததுவே!

கல்லார் மனம்போல்
கருமையிருள்! அவ்விருளில்
பொல்லார் மனம்போல்
புதைகுழியும் முட்புதரும்!

உள்ளுக்குள் பாம்போடும்;
அட்டை உருண்டிருக்கும்;
வெள்ளத் தொளைகளெல்லாம்
வீற்றிருக்கும் நச்சுயிர்கள்!

வானை மறித்த
முகில்களைப்போல் ஆங்காங்கே
யானை முறித்த
மரக்கிளைகள் வீழ்ந்திருக்கும்!

நெட்டைவால் மந்தியினம்
நீண்ட கிளைகளிலே
ஒட்டிக் கிடந்தே
இரவெல்லாம் கூச்சலிடும்!

குட்டைத் தலையும்
குறுங்கழுத்தும் கூனுடலும்
முட்டை விழியும்
முகத்தில் அழுந்தியுள்ள
சப்பைச் சிறுமூக்கும்
சார்ந்திருக்கும் ஆந்தையினம்
ஒப்பாரி வைத்தே
இராமுழுதும் ஓலமிடும்!

சில்வண்டுக் கூட்டம்
இரவில் சிலைவாங்கும்!
முல்லைப் புதர்களிலே
மொய்த்திருக்கும் தேனீக்கள்!

வேங்கை உருமல்
விலாவைக் குடைந்தெடுக்கும்!
தூங்குகின்ற மானினமோ
துள்ளிப் புதரொடுங்கும்!

உள்நடுங்கும் கும்மிருட்டில்
ஒன்றியாய்ப் பெண்கழுதை
முள்பதிந்த மேனியொடும்
முட்டிவிழுங் கால்களொடும்,
ஓட்டமாய் மென்னடையாய்
ஓரிருகல் சென்றபின்னே
நீட்டிப் படுக்க
நினைத்தங்கு நின்றதுவாம்!

# தமிழ்வளர்ச்சி வரலாறு!

காலம்-பாவாணர் கணிப்பு.

குமரிக்கண்டம்—தோராயம் கி. மு. ? -5,500 ஆண்டு
குமரிநாட்டு மாந்தன் தோற்றம்—தோரா. கி. மு. 5,00,000
குமரிமாந்தர் மொழியற்றநிலை—தோரா. கி. மு. 5,00,000
-கி. மு. 1,00,000
இயற்கைமொழி-தோரா. கி. மு. 1,00,000-50,000
தமிழ்த்தோற்றம்—தோரா. கி. மு. 50,000
சொற்றொடராக்கம்—தோரா. கி. மு. 25,000
செய்யுள்நடை—தோரா. கி. மு. 15,000
நால்வகை எழுத்து—தோரா. கி. மு. 12,000
எழுதப்பெற்ற இலக்கியம்—தோரா. கி. மு. 11,000
இலக்கணம்—தோரா. கி. மு. 10,000
தலைக்கழகம்—தோரா. கி. மு. 10,000-5,500
இடைக்கழகம்—தோரா. கி. மு. 4,000-கி. மு. 1500
இடைக்கழக அழிவும் இடைநிலைக்காலமும் } —தோரா. கி. மு. 1500 —கி. மு. 600
வேத ஆரியர் நாவலம் (இந்தியா) வருகை } —தோரா. கி. மு. 2,000 —கி. மு. 1,500
வேதக்காலம்—தோரா. கி. மு. *1500*-கி. மு. *1,000.*
வேத ஆரியர் தென்னாடு வருகை—தோரா. கி. மு. *1,200*
பாரதக்காலம்—தோரா. கி. மு. *1,000*
தொல்காப்பியம்—தோரா. கி. மு. 7-ஆம் நூற்றாண்டு.
கடைக்கழகம்—கி. மு. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 4-ஆம் நூற்றாண்டு வரை.

---

(*மூலம்: மொழிஞாயிறு பாவணரின் "தமிழ்வரலாறு"*)
தொகுப்பு: பா. திருநாவுக்கரசு, இ. பொ.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நின்ற இடத்தில்
நெருப்பு விழியிரண்டு
தென்படவும், உள்பதறித்
தீங்குவந்து விட்டதென்று,
வல்லெனவே பாய்ந்திடக்,கால்
வாங்க முனைகையிலே,
'நில்'லெனவே ஓர்சொல்
நிலமதிரக் கேட்டதுவே! -910

(தொடரும்)

# முத்துமொழிகள்

திரட்டியவர்: வெ. காளியம்மாள்

0 இந்த உலகத்தில் மிகவும் மலிவாகக் கிடைக்கும் சரக்கு அன்பு. அன்பே வாங்குபவனுக்கும், கொடுப்பவனுக்கும் பன்மடங்கு ஊதியத்தைக் கொடுக்கும். —இங்கர்சால்.

0 ஒருவன் மகிழ்ச்சியுடனும், மன அமைதியுடனும் வாழ வேண்டுமானால் தான் என்ற செருக்கின்றிப் பிறரிடம் அன்புடன் நடக்க வேண்டும். —டால்சுடாய்.

0 மதப் போர்களிலும், குலச்சண்டைகளிலும் குருட்டு வழக்கங்களிலும், நாம் உழன்று கொண்டிருந்தால், யாரே நம்மை விடுவிக்க வல்லார்? —இரவீந்திரநாததாகூர்.

0 நல்ல செயல்கள் வெற்றிபெற சில கடைப்பிடிகள் உண்டு. அவை அளவற்ற பொறுமை; முடிவில்லா முயற்சி; அளவுகடந்த தூய்மை! —விவேகானந்தர்.

0 செல்வத்தை உண்டாக்காமல் நுகர முடியாது. அதைப் போலவே இன்பத்தையும் உண்டாக்காமல் நுகர உரிமை கிடையாது. —பெர்னார்டுசா.

0 நல்ல செயலைச் செய்ய நினைக்கிறவர்கள் ஒருக்காலும் ஏமாறுவதில்லை. தீய செயல்களைச் செய்கிறவர்கள் திட்டமிட்டுச் செய்தாலும் ஏமாறி விடுகிறார்கள். —அறிஞர் புரூயர்.

0 இந்தப் பரந்த உலகிலே எதுவுமே நிலையில்லை; நிலையாமை ஒன்றே நிலைத்திருக்கிறது. ஆகையால்தான் உலகப்பொருள்களிடத்து இன்பம் காண முடிவதில்லை. —புத்தர்.


0 ஏழை மக்கள் படுந் துயரங்களை, மேல் நிலையினர் அஃதாவது பணம் படைத்தவர்கள் தெரிந்துகொண்டிருக்கலாம்; ஆனால் உணரமுடியாது. —மாசினி.

0 உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை. நீங்கள் தந்நலத்தைத் துறந்தவர்களா? அப்படியாயின் உங்களை எதிர்க்கும் ஆற்றல் ஒன்றுமில்லை.

—விவேகானந்தர்.

0 யார் யார் உலகில் மிக உயர்ந்த பதவியிலிருக்கிறார்களோ அவர்களுக்கு மிகக் குறைந்த உரிமைதான் உண்டு. ஏனென்றால் அவர்களை உலகம் மிகக் கூர்ந்து கவனிக்கிறது. —சான் டில்வாட்சன்.

0 தொழில் எத்தனைக் கீழ்த்தரமானாலும் அதைச் செய்வதில் இழிவு ஒன்றும் இல்லை. சோம்பேறியாய்த் திரிவதுதான் மிக இழிவு. —டால்சுடாய்.



# பெரியோர் கதை!

## ரூடால்ப் டீசல் (Rudolf Diesel)

அ. மாயிறைவன்.

அறிவியல் வளர்ச்சியால் இன்று இஞ்ஞாலம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. அறிவியலில் வளர்ச்சி கண்டுள்ள நாடே இன்று தன்னிறைவு பெற்று உணவுப் பொருள்களையும், மற்றும் தொழிலகங்களுக்கு வேண்டிய பொறிகளையும், கருவிகளையும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தானும் பயனடைந்து பிற நாடுகளையும் பயனடையச் செய்கிறது. அறிவியல் வளர்ச்சிக்காக இஞ்ஞாலத்தில் பணியாற்றியவர்கள் பலர். அவர்களின் சலியா உழைப்பாலும், அரிய கண்டுபிடிப்புகளாலும் ஞாலம் இன்று நலமுற இயங்கிவருகிறது. இஞ்ஞால மக்கள் வியக்கவும், பயனடையவும் தன்னுடல், உயிர், பொருள் அனைத்தையும் கொடுத்துப் பணியாற்றியவர்களில் ஒருவர்தாம் ரூடால்ப் டீசல் என்னும் அறிஞர்.

உள்ளெரி பொறியில் (Internal Combustion Engine) கன்னெய்க்கு (Petrol) மாறாக 'எரிநெய்' (Diesel) என்னும் நெய்யைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக்கலாம் என்று முதன் முதலாகக் கண்டறிந்தவர் ரூடால்ப் டீசல் ஆவார். இவர், 1858-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 18-ஆம் நாள் பாரீசு நகரத்தில் பிறந்தார். அவருடைய தந்தையாரின் பெயர் தியோடர் டீசல் (Theodore Diesel). தொழில் செய்து முன்னேறலாம் என்ற எண்ணத்தோடு தம்முடைய தாய் நாடாகிய செருமனியை விட்டுப் பிரஞ்சு நாடாகிய பாரீசில்குடியேறிய இவருடைய எண்ணம் ஈடேறவில்லை.

செருமனிக்கும், பாரீசுக்கும் 1871-இல் கடும்போர் மூண்ட காரணியத்தால் ரூடால்ப் டீசல் தம் பெற்றோர்களுடன் இலண்டன் மாநகரை அடைந்தார். பாரீசில் பள்ளிப்படிப்பை முடித்த ரூடால்ப் மேன்மேலும் கற்க ஏந்து இல்லாத காரணியத்தால் தம்முடைய தந்தையின் நண்

பரும், ஆசிரியருமான பார்னிகல் (Barniekall) வாழ்ந்த ஆக்சுபர்க் (Augsburg) என்னுமிடத்திற்குச் சென்று தொழிற் பள்ளியில் சேர்ந்தார்.

தியோடர் டீசல் குடும்பம் மீண்டும் பாரீசிற்குச் சென்றது. ஏழ்மையால் ஏக்கமுற்ற ரூடால்பிற்கு, எப்படியேனும் கல்வி கற்று 'அதற்குத்தக, நிற்க' வேண்டும் என்ற அவா இருந்தது. 1873 முதல் 1875-வரை தொழிற்பள்ளியில் பயின்ற அவர் 1875-ஆம் ஆண்டு மியூனிச் (Munich) என்னுமிடத்தில் உள்ள தொழிற் கல்லூரியில் சேர்ந்து பயின்றூர்.

தொழிற்பள்ளியில் பயின்றபோது காற்றின் அழுத்தத்தால் தீப்பொறி உண்டாக்கப்படும் கருவியைப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. தொழிற்கல்லூரியில் சேர்ந்து பயிலும் பொழுது பல பொறிகளின் அமைப்பையும், அவை வேலைசெய்யும் முறைகளையும் அறிந்துகொண்டார். உள்ளெரி பொறியின் அமைப்பையும், அது வேலைசெய்யும் முறைகளையும் அறிந்து கொள்ளுவதில் அளவுகடந்த ஆர்வம் காட்டினுர். எனவே, இவர் தம் ஆசிரியர்களால் விண்டெர்தர் (Winterthur) என்னுமிடத்திலுள்ள "சல்சார் கூட்டாளிகள்" நடத்திவந்த தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டார். அந்நகர வாழ்க்கை அவருக்கு மனநிறைவு அளிக்கவில்லை. இருப்பினும், அவர் தொழிற் கல்வியில் கொண்டுள்ள நாட்டம் அவரை அங்குத் தங்குவதற்குத் தூண்டியது. 1880-ஆம் ஆண்டு மீண்டும் பாரீசிற்குத் திரும்பிய அவர் நீராவியால் இயங்கும் பொறியை மாற்றி அமைக்க வேண்டும் என்று எண்ணினுர். தொழில் நுணுக்கங்களை அறிந்துகொண்டு 'பெர்லின்' என்னும் நகரத்திற்குச் சென்று உள்ளெரி இயந்திரம் இயங்கும் முறைகளையும், அதனுடைய அமைப்பையும் அறிவதில் மிகுதியான அக்கறை காட்டினுர்.

1892-ஆம் ஆண்டு எரிநெய் இயந்திரத்தின் அமைப்பையும், அஃதுஇயங்கும்முறையையும் கண்டுபிடித்து அதைப்பற்றிக்கட்டுரை ஒன்று எழுதி "சல்சார் கூட்டாளிகள்" என்ற அமைப்பிற்கு அனுப்பினுர். எரிநெய் இயந்திரம் அமைப்பதில் நாட்டம் இல்லாத அவர்கள் முதன் முதலாக ரூடால்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டு எரிநெய் இயந்திரம் செய்ய முன்னின்று உதவி செய்தார்கள்.

தம்முடைய ஒப்பந்தப்படி 1893-ஆம் ஆண்டு ஆகஃசுடில் (10—8—1893) முதல் எரிநெய் இயந்திரம் அமைக்கப்பட்டது.

ஆனால், அதை இயக்கும்போது அவ்வியந்திரம் வெடித்துவிட்டது. இதனால் ''சல்சாரின் கூட்டாளி''களுக்கும் ருடால்பிற்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இருப்பினும், விடாமுயற்சியாலும், சல்சார் நிறுவனத்தின் உரிமையாளர்களின் துணையாலும் தொடர்ந்து ருடால்ப் ஆய்வுகள் நடத்தி எரிநெய் இயந்திரங்களை அமைத்துப் பெரும் வெற்றி கண்டார். அவ் வியந்திரத்திற்கு 'டீசல்' இயந்திரம் என்றும், அதிற் பயன்படுத்தும் எரிநெய்க்கு 'டீசல்' நெய் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. ஆனால் இவருடைய வெற்றியை நாடு முழுவதும் அறிந்து தக்க புகழுரைகள் வழங்குவதற்கு முன்பே, இவர் இயற்கை யெய்தினர்.

இவர் கண்டுபிடித்த இயந்திரங்களின் பயன்கள் பல. (1) பல்வேறு தொழில்களுக்குத் தக்கபடி பலவகை இயந்திரங்கள் உருவாக்கப் பட்டன. (2) குறைந்த செலவில் மிகுந்த வேலைத்திறனைப்பெற அவை உதவின. (3) இவற்றிற்குப் பயன்படுத்தப்படும் எரிபொருளின் விலை குறைவு. (4) இதில் ஆவிக்கலவை வெடிக்காமல் எரிவதால் அவற்றில் இழப்பு ஏற்படுவதில்லை.

தம்பிகளே, தங்கைகளே, இன்று, நாம் எரிநெய்யால் இயங்கும் சரக்குந்து, பேருந்து, தொடர்வண்டி முதலியவற்றைக் காணும் பொழுதெல்லாம் நமக்கு டீசலின் நினைவு வருகிறதன்றோ? எனவே நாமும் அவரைப்போல் தொழிற் கல்வியில் நாட்டம்கொண்டு புகழடைவோமாக!

---


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

### மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

| | உள்நாடு. | வெளிநாடு. | கொழும்பு. |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 5-50 | 4-00 |
| தனியிதழ் ,, | 0-25 | 0-45 | 0-35 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க!

முன்னிதழ்த் தொடர்ச்சி.

# பெருக்கலில் சுருக்கம்.

-பாவை-நடவரசன்.

(கெ) $97531 \times 48124$:—

இதில் பெருக்கும் எண் 48124ஐ 48,12,4-என மூன்று பிரிவுக -ளாகப் பிரிக்கலாம். ஏனெனில் 12-உம், 48-உம் 4-இன் மடங்குகளா கும். $4 \times 3 = 12$; $4 \times 12 = 48$.

செய்யும்முறை:—

$$\begin{array}{rl} 97531 \times 48\ 12\ 4 & \\ \hline 390124 & (\text{க}) \times 3 \because \frac{12}{4} \\ 1170372 & (\text{கா}) \times 4 \because \frac{48}{12} \\ 4681488\phantom{00} & \\ \hline 4693581844 & \text{விடை} \\ \hline \end{array}$$

இதைச் செய்யும் பொழுது மிகவும் உன்னிப்பாய்க் கவனித்துச் செய்ய வேண்டியது, (கா)வைப் பெருக்குவதாகும். அதனை 4-ஆல் பெருக்குகின்றோம். அது 48-ஆல் பெருக்குவதற்குச் சமமாகும். இந்த எண் (48) பெருக்கும் எண்ணின் ஆயிரத்துநிலையில் இருக்கிறது. எனவே, இதன் பெருக்குத் தொகையைப், பெருக்கப்படும் எண்ணின் ஆயிரத்துநிலைக்கு நேர் கீழிருந்து தொடங்கி இடப்புறமாக எழுதுதல் வேண்டும்.

(கே) $9876 \times 99$:—

இங்கே பெருக்கும் எண்ணாகிய 99-ஆனது 100-க்கு 1-தான் குறைவு. அதனால், 9876-ஐ 99-ஆல் பெருக்குவதைவிட 100-ஆல் பெருக்கி, அதிலிருந்து. 9876-ஐ 1-ஆல் பெருக்கிவரும் எண்ணை வைத்துக் கழித்துவிடல் வேண்டும். இம்முறை 99-ஆல் பெருக்கிச் செய்வதைவிட எளிய முறையாகும்.

செய்யும் முறை:—

$$\begin{aligned} & 9876 \times 99 \\ & = 9876 \times (100 - 1) \\ & = 987600 - 9876 \\ & = 977724 \end{aligned}$$

(கொ) பெருக்கும் எண் 98,-ஆக இருந்தால் ......

98-ஆனது 100 க்கு 2-தான் குறைவு. எனவே, பெருக்கப்படும் எண்ணை, (9876) 100-ஆல் பெருக்கி, அதிலிருந்து பெருக்கப்படும் எண்ணை 2-ஆல் பெருக்கி வருவதை வைத்துக் கழித்துக் கொள்ளல் வேண்டும்.

$$9876 \times 98$$
$$= 9876 \times (100 - 2)$$
$$= 987600 - 19752.$$
$$= 967848$$

இம்முறையைக் கையாண்டால் எளிதில் பெருக்கிவிடலாம்:-
பெருக்கும் எண் 999-ஆக இருந்தால் அதனை (1000—1) எனவும்,
பெருக்கும் எண் 998-ஆக ,, ,, (1000—2) எனவும்,
,, ,, 997-ஆக ,, ,, (1000—3) எனவும்,
,, ,, 9999-ஆக ,, ,, (10000-1) எனவும்,
,, ,, 9997-ஆக ,, ,, (10000-3) எனவும்,
–பிரித்துக் கொண்டு, பெருக்கப்படும் எண்ணை மிக எளிதாகப் பெருக்கலாம், கணக்கில் பிழையும் ஏற்படாது.

(கோ) பெருக்கும் எண் 102, 1003; ......என இருந்தால் பெருக்கும் முறை:—

$7531 \times 102$:—

102-ஆல் பெருக்குவதற்குப் பகரமாக (பதிலாக) 100-ஆலும், 2-ஆலும் 7531-ஐப் பெருக்கிக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

$$7531 \times (100 + 2)$$
$$= 753100 + 15062$$
$$= 768162$$

இம்முறையில், பெருக்கும் எண் 103-ஐ (100+3) எனவும்,
,, 104-ஐ (100+4) எனவும்,
,, 1002-ஐ (1000+2) எனவும்,
,, 10005ஐ+2 (10000+5) எனவும்
பிரித்துக்கொண்டு, பெருக்கப்படும் எண்ணை, மிக எளிதில் பெருக்கி விடலாம்.

கணக்கு என்பது கற்கண்டு ஆகும்; கடிக்கச் சற்றுக் கடினமாக இருக்கும். கடித்துவிட்டால், சுவைக்க நன்றாக இருக்கும். நான் சில துண்டுகளை நொறுக்கினேன். அவை சுவையாக இருந்தன. அவற்றில் சிலவற்றைத்தான் மேலே நான் எழுதியது. எண்ணும் எழுத்தும் அவற்றின் (கணக்கின்) இருகண்கள் ஆகும். அவற்றைமட்டும் ஊன்றிப்படித்துப் பார்த்து, ஊக்கத்தோடு செய்தால், கணக்கினை விரைவாகச் செய்யலாம்; நிறையக் குறியீடும் வாங்கலாம். முயலுங்கள்; முன்னேறுவீர்கள்! (முற்றும்)

# உங்களுக்குத் தெரியுமா?

1. அமெரிக்காவின் தந்தை சார்சு வாசிங்டன் சென்ற பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசி ஆண்டில், கடைசித் திங்களில் கடைசிக் கிழமையில், கடைசி நாளில், கடைசி மணியில் இறந்தாராம்.

2. வட அமெரிக்காவில் பசிபிக் கடலின் கரையோரங்களிலும் ஆறுகளின் முகத்துவாரங்களிலும் ஒருவகை மீன் அகப்படுகிறதாம். அதன் உடல் மெழுகுத்திரி போல் இருக்குமாம். அம்மீனைப் பிடித்து அதன் தலையிலிருந்து வால்வரை ஒரு தொளை செய்து அதனுள் திரியைச் செருகிக் கொளுத்தி வைத்தால் மெழுகுத்திரியைப்போல் எரிந்து கொண்டிருக்குமாம்.

3. தட்டாம் பூச்சியின் கண்ணில் ஐம்பதினுயிரம் நரம்புகள் இருக்கின்றனவாம்.

4. பசிபிக்கடலின் அளவு ஏழுகோடி சதரக்கற்களாம். அஃதாவது இவ்வுலகில் உள்ள கண்டங்கள் தீவுகள் இவற்றின் முழு அளவை விடப் பெரியது.

5. வெளிநாடுகளில் 25 இலக்கம் இந்தியர்கள் வாழ்கிருர்கள்.

6. சோவியத்துஉருசியாவில் 150 மொழிகள் பேசப்படுகின்றனவாம்.

7. ஆத்திரேலியாவில் நுலர்பர் என்னும் சமவெளியில் ஓடும் இருப்புப்பாதை 300 கல் தொலைவுவரை ஒருவளைவும் இல்லாமல் ஒரே நேர்க்கோட்டில் ஓடுகிறதாம்.

8. உலகப் புகழ்பெற்ற ருபாயத் ஓமர்கயாம் என்ற முழு நூலின் படி ஒன்று நியூயார்க் நகரில் வாழும் பி. எசுலாங் என்பவரிடம் இருக்கின்றது. அதன் அளவு விரற்கடையில் பதினுறில் ஐந்து பங்கு (5/16) கொண்ட ஒரு சதரவடிவம்.

9. பிறக்கும்போது எல்லாக் குழந்தைகளுக்கும் கண் நீலநிறமாகவே இருக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள்.

10. ஒருவன் தன் வாழ்வில் மழித்துக்கொள்ளும் தாடியின் நீளத்தைக் கணக்கெடுத்து இருக்கிருர்கள். அஃது ஏறத்தாழ 140 கல் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

11. பிலிப்பிரடசுபோர்ட்சு என்ற பிரபல பிராஞ்சுப் பாவலர் வரிக்கு 100000 டாலர் வாங்கியவராவார். காலம்-1546-1606.

12 மார்பில் இடப்புறம் நெஞ்சாங்குலை இருப்பதற்கு மாருக செருமனியில் இலக்கத்துக்கு ஒருவர்மேனி வலப் பக்க நெஞ்சுடையவராக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள்.

13. இங்கிலாந்திலுள்ள லியசோவி கலங்கரை விளக்கு இந்தியப் பஞ்சும் அந்தக் கடற்கரைத் தண்ணீரும் கலந்து கட்டப்பட்டது. இது கடந்த 190 ஆண்டு காலமாகச் சிதைவுருமல் பலமாக நிற்கிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அரச. மணிமாறன், இடையார்பாளையம், புதுவை-7

# விளையாடு

-இளஞ்சித்திரன்.

௧. ஆடி விளையாடு—தம்பி,
அழகு தமிழில் பாடு
கூடி விளையாடு—ஒரு
குளிர் நிலவுக் கீடு! (ஆடி)

௨. மேலைக் கதிர்சாயும்—மஞ்சள்
வெயில் எங்குந்தோயும்.
மாலை தனில்நீயும்—சற்று
வாட உடற்காயும் (ஆடி)

௩. கோடைப் பகல்போலே—ஊர்
கொண்ட வெளிமேலே
ஓடைக் கயல்போலே—துள்ளித்
துள்ளி மகிழ்வாலே (ஆடி)

௪. நாடி நரம்பேறும்—உடலில்
நல்ல குருதியூறும்
கோடி நலங்கூறும்—முகத்தில்
கொள்ளை அழகுசேரும். (ஆடி)

---

0 மாந்தனின் மயிர், தோல், உகிர்கள் இவற்றில் வெவ்வேறான பத்தொன்பதுவகையான உலோகப் பொருட்கள் இருக்கின்றனவாம்.

0 பத்துப் பேருக்கு ஒருவர் குறட்டைவிடும் பழக்கமுள்ளவராய் இருக்கின்றார். பொதுவாக 30 அகவைக்கு மேற்பட்டவர்கள்தாம் மிகுதியாகக் குறட்டை விடுகின்றனராம். இதற்கு மருந்தே இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.


0 "சீல்" என்னும் கடல்வாழ் உயிரிகளில் ஆண்சீலானது பெண்ணோடு இணையுங்காலத்து, மூன்று திங்கள் உண்ணாதேயிருக்குமாம்.

0 பின்லாந்து நாட்டில் ஒருவகை மரப்பட்டையின்று சருக்கரை செய்கின்றார்களாம்.

0 பொதுவில் மாந்தனது உணவுக்கேற்ற மீன்கள் கடலில் அறுநூறு அடி ஆழத்திற்குக் கீழே வாழ்வதில்லையெனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

---

(தொகுப்பு: —"மணவாளன்")



# கோழி என் தோழி!

1. கொக்கரகோ கொக்கரகோ கோழி—என்
கூடஇரு; நான்உனக்குத் தோழி!
பக்கம் வந்து நீசிறிது நாழி—இரு;
பத்தளிப்பேன் வண்ண நிறச் சோழி!

2. செந்தமிழில் பாடிடுவேன் பாட்டு—கேட்டுச்
செந்நெருப்புக் கொண்டையை நீ ஆட்டு;
வந்தழகு மேனியை நீ காட்டு—என் பால்
வஞ்சமில்லை; அன்புடைமை கூட்டு.

3. சீய்ப்பதேன் நீ குப்பையுள்ள மேடு?-வா
சென்றிடுவோம் தூய்மையான வீடு;
வாய்திறந்து பேசஎன்ன கேடு?-கெட்ட
வம்பறியா என்னுறவை நாடு!

4. வைக்கோல்போரில் ஏறுவது வம்பு!-பாட்டி
வந்துவிட்டால் வைதெடுப்பாள் கம்பு!
கைக்கோல்பட்டால் தாங்குமாஉடம்பு?-நீ
காத்திருக்கும் என்னுடன்வா; நம்பு.

5. பல்லாங்குழி ஆடலாமா சொல்லு-வா
பந்தெறிந்து பாடலாமா? நில்லு.
கல்லாதவள் என்றநிலை கொல்லு!-தமிழ்
கற்றறிந்து நீபறந்து செல்லு!

6. கூரைமேலே ஏறுகின்றாய் துள்ளி-நான்
கூப்பிட்டதை விட்டனையா எள்ளி?
சீரைப்பெற என்னுடன்வா பள்ளி!-நாம்
செந்தமிழைக் கற்கலாமே தெள்ளி!

---

காரை-இறையடியான்.

# பஞ்சாபி மொழியில் தமிழ்ச்சொற்கள்

**பல்தேவ் அரச குப்தரின் (Baldev Raj Gupta) ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து,**

*[தொகுத்து விடுத்தவர்: நாட்டரக்கோட்டை, சு. நாகலிங்கம்.]*

அக்கம்பக்கம்-aase paase
அடிக்கடி-Kadi kadi
அடீ!-Arii
அரம்-Aaraa
(அத்)னுல்-ஆல்-Naal
(அதனுல்)தான்-Taan
அம்மா-Ammaa
ஆம்-Vaan
உதிர்(தல்)-Udar
ஊசி-Suui
கட்டு-Gath
கரடு(முருடாய்)-Karraa
கடி-Kat
கலே-Kalaa
களர்-Kalaar
கடை(தல்)-Kadh
கடு(புளித்தல்)காடி-Kauraa
கறண்டு(தல்)-Khrund
கலக்கு-Kalak
கருத்(தல்)-Kaalaa
கவுள்-Gall
காக்கா-Ka
காளம்(கழுத்து)-Galaa
கீண்டு-Khurc
குண்டா(குடம்)-Kuundaa
குகை, குவை-Gufa
குடி(ல்)-Kutti, kuti
குப்பை-Kup
குழை-Kuulaa
குனி, கூனி-Kuuni
கூடு-Khud
கெண்டை(க்கை;கால்)-Gitta
கொட்டு(பறைகொட்டுதல்)-Kut
கொஞ்சம்-Kujh
கோட்டை-Kot
நுங்கு(தல்)-Ningal
சரசரவென நகர்தல் (சாரை)................ } -Sarate
சாடி(கலம்)-Caati
சின்ன-Cunnaa
சீட்டு-Cit
சூப்பு(தல்)-Cuup
சூல்-Suu
செடி-Jhaari
சேர்(நிறை)-Ser
சொத்தென(விழல்)-Suttana
சோறு-Caul
சோடி(இரண்டு)-Jori
தள்(?)ளுதல்-Taar
தாத்தா Daadaa
தோசை-Tosaa
நட(த்தல்)-Nath
பற்று(தல்)-(பிடித்தல்)-Phar
படி(மாடிப்படி)-Pauri
பாய்(தல்)-Pai
பிரி-Puri
பிளவு-Bil
புகல்-Bol
பெட்டி-Peti
பொடி(த்தல்)-Put
போடு-Pa
மாட்டான்-Mat
மாமன்-Mamaa
மாடு-Maal
முதல், முதல-Mudhalaa
முன்பே-Mohre
முறி-Mor
மூடு-Mur
மிதி-Midh
மெலி(னம்)-Malaim
வட்டு, வட்டம்-Vatt
வள், வளையம்-Val
வறு(த்தல்)-Baraani
வா-Aa
வேலே.-Vehal.

# தொண்டன், நீ!

அரசியல் தெரிந்துகொள்;
அறமும் தெரிந்துகொள்;
வரிசையாய் நேர்மையும்
வாய்மையும் கடைப்பிடி;
முரசின் முழக்குப்போல்
முறுக்கேற்று குரலில்;
உரைக்கத் திறன்பெறு;
ஊர்க்கு உழை; தொண்டன், நீ!

கொடிபிடித் திடுவதும்
கூச்சல் இடுவதும்
அடிபிடி வேலே;
அரசியல் அன்று!
மடிபிடித் தென்றும்
மாங்காய் பறியாதே!
குடிகள் நலம்பெறக்
கொடு, உனே; தொண்டன், நீ!

கரையற்ற வேட்கை,
கடமையின் எழுச்சி,
தரையெலாம் பாயும்
தணல்கின்ற எண்ணம்,
புரையிலா அன்பு,
பூக்கட்டும் நெஞ்சில்!
விரையும் பொருட்குனே
விற்காதே; தொண்டன், நீ!

வழுக்கிடும் பதவிக்கு
வால்பிடிக் காதே!
பழக்கமும் நெகிழ்ச்சியும்
பாழ்செய்யும் உன்னே!
ஒழுக்கமே உடலுரம்!
உழைப்பதே இன்பம்!
மழுக்கில்லா முயற்சிகொள்;
மருளாதே; தொண்டன், நீ!

உள்ளத்தால் பேசிடு;
உரைக்குச் செவிகொடு;
கள்ளத்திற் கஞ்சு;
கனிவுக்குக் கனிவுசெய்;
பள்ளங்கள் நயத்திலும்
பணிவிலும் இருக்கலாம்;
எள்ளலே எடுத்தெறி!
எழு; நட! தொண்டன், நீ!

-துரை-மாணிக்கம்-

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.